விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 4 ரவி அவ் 20 இதழ் 335

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 17-1-82

## வெள்ளை அறிக்கையை எதிர்த்தால் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

கல்வி வெள்ளை அறிக்கைக்கு எதிராகச் செயற்படும் ஆசிரியர்கள், மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வெள்ளை அறிக்கையை எதிர்த்து வகுப்புக்களைப்பகிஷ்கரிக்குமாறு ஒரு சிலர் மாணவர்களைத் தூண்டி வருவதாக நாட்டில் பரவலாகக்கிடைத்த புகாரை அடுத்தே அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகக் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

சில தீய சக்திகள் மாணவர்களைத் தூண்டுவதாகவும், கல்விப் பணிப்பாளர்கள் விழிப்பாக இருந்து உடன்நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கல்வி அமைச்சர் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கல்விப் பணிப்பாளர் மகாநாட்டில் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

(கு—இ)

## பொறுப்பேற்றார்

புதுடில்லி, ஜன. 16

பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் இன்று தனது புதிய பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டதும் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்தார்.

படைத்தளபதிகள் பாதுகாப்பு அமைச்சரை சந்தித்து வாழ்த்துக்களைக்கூறினர்.

★ தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் ★

# பிரதேச மாநாடு முல்லைத்தீவில் செப்டம்பரில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

அனைத்துலகத்தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் இரண்டாவது பிரதேச மகாநாடு இவ்வருடம் செப்டம்பர் மாதத்தில் முல்லைத்தீவில் நடைபெறவுள்ளது.

''வன்னிப் பிரதேசத்தின் வரலாறும் கலாசாரமும்'' என்னும் தலைப்பில் நடைபெறவுள்ள இப்பிரதேச மகாநாடு முன்பொருகாலத்தில் வன்னி அரசர்களின் இருப்பிடமாகத் திகழ்ந்த முல்லைத்தீவில் நடைபெறுவது பொருத்தமானதெனக் கருதப்படுகிறது.

அனைத்துலகத்தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் முதலாவது பிரதேச மகாநாடு 1976ல் மட்டக்களப்பில் நடைபெற்றது. இரண்டாவது மகாநாடு வவுனியாவில் 1978ல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அது தடைப்பட்டது. மீளவும் முல்லைத்தீவில் இவ்வருடம் நடைபெற ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இம்மகாநாட்டிற்கு மேற்கூறிய தலைப்பில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் மன்றச் செயலாளர் திரு. வி. எஸ். துரைராசாவுடன் அல்லது டாக்டர் ஜேம்ஸ் இரத்தினத்துடன் 75, வோர்ட் பிளேஸ், கொழும்பு—7 என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

(கி)

## தெல்லிப்பளைவாசி தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில், கந்தையா சிவகுமாரன் என்பவர் பாதுகாப்புப் படையினரின் தாக்குதலுக்குள்ளாகி தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தைப்பொங்கல் தினத்தன்று பிற்பகல் இவர் தாக்குதலுக்குள்ளானாராம்.

சுன்னாகம் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

(மா)

## ஆயுதப்படையிடமிருந்து சார்ஜன்ட் வேலாயுதபிள்ளை விடுவிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆறுமாதங்களுக்கு மேலாக ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் வேலாயுதபிள்ளையும் மற்றும் நான்குபேரும் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

81ம் ஆண்டு ஜூன் மாத முற்பகுதியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது, மருதனுமடம் சந்தியில் வெற்றுத்தோட்டாக்கள் எடுத்தது சம்பந்தமாக இவர்கள் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்,

சுன்னாகம் பொலிஸ் சார்ஜன்ட் வேலாயுதபிள்ளை, றிசேர்வ் பொலிஸ் ரகுநாதன், உடுவில் கிராமசபைக் காவலாளி கனகலிங்கம்நாதன் மருதனுமடம் சபாபதி சுப்பிரமணியம், உரும்பராயைச் சேர்ந்த சதிரன் தம்பு ஆகிய ஐவருமே ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டு

[6ம் பக்கம் பார்க்க]

## மினிபஸ்மீது வழிமறித்து தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சேவையிலீடுபட்டிருந்த ஒரு மினி பஸ் கோஷ்டி ஒன்றினால் வழிமறிக்கப்பட்டுத் தாக்குதலுக்குள்ளானதால் 17,000ரூபா நஷ்டம் ஏற்பட்டதாகப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலிக்குச்சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்றை சிறுப்பிட்டி வைரவர் கோவிலடியில், இரு தென்னங்குற்றிகளைப் போட்டு வழிமறித்து, அதே இடத்தைச் சேர்ந்த குலசிங்கம் தலைமையிலான ஒரு கோஷ்டி ஆயுதங்களினால் தாக்கி மினி பஸ்ஸைச் சேதப்படுத்தியதாகவும், பின்னர் மினி பஸ்ஸை சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குத் தாம் கொண்டு வந்ததாகவும், சாரதி நாகநாதி முத்துக்குமாரசாமி தமது புகாரில் தெரிவித்துள்ளார்,

சுன்னாகம் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப்பிரிவு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். சிவராசா, சார்ஜன்ட் சேனரத்ன, பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சிவயோகம், கே. கந்தசாமி, ரி. குணசிங்கம் ஆகியோர் விசாரணை செய்துவருகின்றனர்.

(மா—அ)

## அரிய சந்தர்ப்பம்

COMPUTER PROGRAMMING

(கொம்பியூட்டர் புறேகிறமிங்)

இன்றைய நவீன உலகில்

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பெரிய ஸ்தாபனங்களில் இலகுவாக வேலை பெறுவதற்கு அரிய சந்தர்ப்பத்தை வழங்க

'கொம்பியூட்டர் புறேகிறமிங்''

புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

எங்கள் நிறுவனத்திலுள்ள கொம்பியூட்டர் இயந்திரத்தில் விசேட பயிற்சிகளும்

(PRACTICAL TRAINING)

அளிக்கப்படுகின்றன.

விபரங்களுக்கு நேரில் வரவும் அல்லது விண்ணப்பிக்கவும்,

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 23 01-82

AUTO COOL ENGINEERS

(சாந்தி சினிமா முன்பாக)

கந்தப்பசேகரம வீதி, யாழ்ப்பாணம்.

(2005)

# கல்வி வெள்ளை அறிக்கை இலவச கல்விக்கு சாவுமணி

## பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் வரணபால அரசாங்கத்தை சாடுகிறார்

(கொழும்பு)

''கல்வி வெள்ளைப்அறிச்கை இலவசக் கல்விக்கு நிச்சயம் சாவுமணி அடிக்கும்''.

இவ்வாறு பேராதனை பல்கலைக்கழகப் பேராசிரியர் விஸ்வ வரணபால கேகாலையல் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசுகையில் கூறினார்.

தாம் கேகாலையிலுள்ள ஒரு வறிய குடும்பத்தில் பிறந்த போதும் தாம்பெற்ற இலவசக் கல்வியினாலே இன்று இந்தப் பதவி வரை உயர்ந்ததாகவும் இன்று இவ்வைபவத்தில்பேசக் கூடியதாகவுள்ளதாகவும்அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

கல்வி வெள்ளை அறிக்கை அரசு தரப்பினரது அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய முறையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டை அழித்தது இப்போதுள்ள கட்டுப்பாடற்ற பொருளாதாரக் கொள்கையே யாகும். ஆனால் அரசாங்கம் இந்த பொருளாதாரக் கொள்கையைப் பற்றி வீண் தம்பட்டம் அடிக்கிறது. இதேபோல் இலவசக் கல்விமுறையைஅழிப்பதற்கே இந்த கல்வி வெள்ளை அறிக்கையும் அறிமுகப்படுத்தப்படுகிறது.

வாக்குரிமைபெற்ற ஐம்பதாவது ஆண்டு விழாவை அரசு சிறப்பாக கொண்டாடியஅதே நேரத்தில் இலங்கையின் தவப்புதல்வன் அமரர் சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராஎமக்குத் தந்த இலவசக்கல்வியை அழிக்கப்பார்க்கிறது.

இலங்கையின் முதற்பிரதம

(6ம் பக்கம் பார்க்க)

## கல்வி வெள்ளை அறிக்கையை வாபஸ் பெறுக

### கம். வாலிபர்சம்மேளனம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

''இலவசக் கல்விக்குவேட்டு வைக்கும் கல்வி வெள்ளை அறிக்கையைவாபஸ்பெறுக.''

இவ்வாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்று இலங்கை சம்யூனிஸ்ட் வாலிபர் சும்மேளனத்தின் யாழ். மாவட்ட மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

திரு. என். கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

''ஒரு சிலருக்கு மாத்திரம் வாய்ப்பு வசதியளிக்கும் வேலை வங்கிமுறையை ஒழிக்கவேண்டும்.

''அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்து சமுத்திரத்திரப் பிராந்தியத்தை யுத்த முஸ்தீபுகளுக்குள்ளாக்குவதைக்கண்டிப்பதுடன் இப்பிரதேசத்தைச் சமாதானமண்டலமாக்கஆக்க

(6ம் பக்கம் பார்க்க)

## ஒஸ்டின் பஸ் விற்பனைக்கு

23 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய 42 ஆசனங்களைக் கொண்ட ஒஸ்டின் பஸ் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சு. கந்தசாமி, 109/2, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (2008)

'இலங்கை தேசிய முன்னணி'

# நெவில் பெர்ணுண்டோ புதியகட்சி அமைத்துள்ளார்

## எம். பிக்கள் பலரும் தமது கட்சியில் சேருவார்களாம்

(கொழும்பு)

பாராளுமன்றத்திலிருந்து ராஜினுமாச்செய்த பாணந்துறை எம். பி. டாக்டர் நெவில்பெர்ணுண்டோ புதிய கட்சி ஒன்றை அமைத்துள்ளார்.

"இலங்கை தேசியமுன்னணி" (லங்கா ஜாதிகபெரமுன) என்ற பெயரிலேயே புதியகட்சி அமைக்கப்பட்டுள்ளதாக டாக்டர் பெர்ணுண்டோ நேற்றுமுன்தினம் அறிவித்தபர்.

தமது புதிய கட்சியின் முதலாவது பொதுக்கூட்டம் அடுத்தமாதம் நடைபெறும்போது கட்சியின் கொள்கைகள் பற்றிய விபரம் அறிவிக்கப்படும் என்றும் டாக்டர் பெர்ணுண்டோ தெரிவித்தார்.

தற்போது எம். பிக்களாக இருக்கும்பலர் தமது கட்சியில் சேர்ந்துகொள்ளவிருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் திரு. ஜினதாச நியதிபால கட்சியின் பொதுச்செயலாளராக இருப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதையடுத்து ஐக்கியதேசியக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட டாக்டர் பெர்ணுண்டோவை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றும் பிரேரணை மீதான விவாதம் சபையில் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், அவர் தமது பதவியை ராஜினுமாச் செய்தது தெரிந்ததே. (இ)

---

### மக்கள் கருத்து

## நாமும், நமது பல்கலைக்கழகமும்

றுகுணு பல்கலைக்கழக கல்லூரியை அபிவிருத்தி செய்வதற்காக தனிப்பட்ட ஸ்தாபனம் ஒன்று அண்மையில் நிறுவப்பட்டு 60 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட இருக்கும் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டில் உள்ள நலன் விரும்பிகளும் கல்விமான்கள் தனவந்தர்களும் உதவி அளிக்க முன்வந்துள்ளனர் என்றும் ஒருவர் 5 லட்சம் ரூபாவை இந்த நிதிக்கு அளிக்க விருப்பம் தெரிவித்துள்ளார் என்றும் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்செய்தியைக் கண்ணுற்றதும் வருடங்கள் பல கடந்தும் தவழும் நிலையிலேயே இருக்கும் யாழ். பல்கலைக்கழகத்தின் எண்ணம்தான் மனதில் எழுந்தது.

யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பித்த காலத்தில் எல்லோருக்கும் மகிழ்வு தரக்கூடிய ஒரு செய்தி யாழ்ப்பாணத்தில் பரவலாக அடிபட்டது.

செய்தி இதுதான்—

யாழ். பல்கலைக்கழகத்தை உலக பல்கலைக்கழகங்களின் தரத்திற்கு உயர்த்தும் நோக்குடன் வெளிநாடுகளில் தற்போது பணிபுரியும் இலங்கைத் தமிழ் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நிபுணர்கள் யாவரும் இலங்கை திரும்பி யாழ். பல்கலைக்கழகத்தில் கடமையாற்றத் தீர்மானித்துள்ளனர். எனவே விரைவில் யாழ். பல்கலைக்கழகம் உலக பல்கலைக்கழகங்களின் தரத்திற்கு உயர்ந்துவிடும்.

ஆனல் ஆண்டுகள் பல கடந்தும் அதற்கான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

எனினும் இதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் நடைபெறும் என எதிர்பார்க்கும் அதே வேளையில்—

தென் இலங்கை பிரமுகர்கள், தனவந்தர்களைப் பின்பற்றி தமிழ் மக்கள், குறிப்பாக தனவந்தர்கள், பிரமுகர்கள் சகலரும் முன்வந்து "யாழ். பல்கலைக்கழக அபிவிருத்தி நிறுவனம்" ஒன்றை அமைத்து எமது பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்ய முன்வர வேண்டும் என்று எமது எதிர்காலச் சிறுர்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

கே. நவரத்தினம்

கொக்குவில் கிழக்கு

---

## வல்வை நகரசபை ஜனதிபதிக்கு தந்தி

(வல்வெட்டித்துறை)

1980ம் ஆண்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வேலையிழந்தோரை மீண்டும் வேலைக்கமர்த்துமாறு கோரி ஜனதிபதிக்குத் தந்தி யொன்றினை வல்வெட்டித்துறை நகரசபை அனுப்பி வைத்துள்ளது.

தந்தியில், வேலையிழந்தோர் அனுபவிக்கும் கஷ்டங்கள் எடுத்து விளக்கப்பட்டிருப்பதுடன் அவர்கள்மீது அனுதாபம் காட்டி உடன் வேலை வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இத்தந்தியின் பிரதிகள் பிரதமர், நிதி அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

---

## அல்லைப்பிட்டி மண்டைதீவு நூலகங்களுக்கு நிதி

(மண்டைதீவு)

அல்லைப்பிட்டி யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உபபணிமனை பொது நூல் நிலையத்திற்கு இவ்வருட நிதியாக அபிவிருத்திசபை மூவாயிரம் ரூபா வழங்கியுள்ளது.

பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்கள் வாங்குவதற்காக இந்நிதி வழங்கப்பட்டதாக நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார்,

மண்டைதீவு யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபை உபபணிமனை பொது நூல் நிலையத்துக்கும் சபை ஐநூறு ரூபாவை சஞ்சிகைகள் வாங்குவதற்கு வழங்கியது.

---

## சுவாமிகள் ஆசியுரை

(யாழ்ப்பாணம்)

யோக சுவாமிகளின் சீடரான ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகள் இன்று மாலை கோப்பாய் வீரபத்திரர் கோவிலில் ஆசியுரை வழங்குவார்.

கோப்பாய் சிறுவர் முன்னேற்றக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் சுவாமிகள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு ஆலயத்தின் விசேட பூஜையை அடுத்து ஆசியுரை வழங்குவார். (ச)

---

இன்று சைவப் பெரியார்

சிவபாதசுந்தரனர் பிறந்த தினம்

## சைவ போதம் வழங்கிய சான்றோர்

மெய்ந்நெறி காட்டி மேனிலை சேர்க்கும்  
சைவசித் தாந்தம் எனும்பெரு நிதியைப்  
பண்டு தொட்டுக் காத்தோர் பல்லோர்!  
ஈழநன் னட்டில் நல்லையிற் பிறந்த  
நாவலர் பெருமான் எனும்தவக் கொழுந்தின்  
வழியில் வந்த திருவுடைப் பெரியார்  
சைவப் பெரியார் என்றே உலகம்  
சாற்றிடத் தகுந்த பண்புகள் மிக்கவர்  
நற்சிவ பாத சுந்தரப் பெரியார்  
தூயதாம் உள்ளம் தூயதாம் வாழ்வு  
தூயதாம் தொண்டு வாழ்வெலாம் புரிந்தவர்  
திருவருட் பயற்குச் சிருரை செய்தவர்  
சித்தாந் தத்தை விளக்கிடும் வகையில்  
மன்னும் நூல்பல தெளிவுற ஆக்கினர்  
ஆலயம் பலவும் புதுக்குதற் கென்றே  
காலம் யாவும் கருத்துடன் உழைத்தவர்  
செந்தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் வடசொல்  
ஆங்கிலம் தன்னை அழகிய தமிழில்  
பாங்குறப் பெயர்க்கும் கலையிலும் வல்லவர்  
சைவ போதம் தெளிவுற வழங்கிய  
சான்றோர் அவர்பணி சிந்தையில் வைப்போம்.

- "இளங்கோ"

---

## இளம்பெண் படுகொலை இரு வாலிபர்கள் கைது!

(துணுக்காய்)

19 வயது இளம்பெண் ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் படுகொலைசெய்யப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாங்குளம்-துணுக்காய் பிரதான வீதியில் 7வது மைல் தொலைவில் அமைந்துள்ள வடகாடு என்னும் கிராமத்திலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது,

குறிப்பிட்ட பெண்ணின் தாய் தந்தையர், சகோதரர்கள் மலையகப் பகுதியிலிருந்து வேலைதேடி இங்கு வந்து குடியமர்ந்தவர்கள்என்றும்,சம்பவ தினம் அவர்கள் கூலிவேலைக்குச் சென்றுவிடவே, இளம்பெண் மட்டும் வீட்டில்லிருப்பதைஅறிந்த வாலிபர் இருவர் இவரைப் பலாத்காரம்செய்ய முயன்றபோது, கற்பைப் பாதுகாக்க, பெண் வாலிபர்களுடன் போராடினுரென்றும் இதன் விளைவால் பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டாரென்றும் பெண்ணின் அவலக்குரலால் அயலவர்கள் விரையவே வாலிபர்கள் காட்டில் பாய்ந்து ஓடி மறைந்தனர் என்றும் கழுத்து நெரிக்கப்பட்ட இந்தப் பெண் தனது சொந்த வீட்டிலேயே மரணமாஞரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மாங்குளம் பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து, சம்பவம் நடந்த இடங்களைப் பார்த்ததுடன், சந்தேகத்தின் மீது இரு வாலிபர்களைக் கைதுசெய்துள்ளனர். வவனியாப் பொலிஸ்நிலைய உதவிப் பொலிஸ் அதிபரும் இச்சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டார்.

---

மாங்குளம் பகுதியில்

## பொலிஸ் - ராணுவ சோதனை தொடர்ந்து நடக்கிறது

(துணுக்காய்)

மாங்குளம் பொலிசாரும் இராணுவத்தினரும் இப்பகுதிகளில் ரோந்து சுற்றி வருவதுடன் திடீர் சோதனைகளையும் மேற்கொண்டனர்.

வவனிக்குளம், பாண்டியன்குளம், துணுக்காய், மல்லாவி போன்ற பகுதிகளின் பிரதான வீதிகளில் வரும் வாகனங்களை சோதித்ததுடன் பிரயாணிகளையும் விசாரணை செய்தனர்.

நேற்று முன்தினம் முருகண்டி கோவிலடியிலும் வாகனங்களை திடீர் சோதனை செய்ததுடன் சந்தேக நபர்களின் நடமாட்டங்களையும் கவனித்தனர். திடீர் சோதனை மேற்கொண்டுவரும் பொலிசாரும் இராணுவத்தினரும் இப்பகுதிகளிலுள்ள அரசாங்க திணைக்களங்களைச் சேர்ந்த கட்டிடங்களையும் பாதுகாக்கும் வகையில் அடிக்கடி நேரில் சென்று வருகிறுர்கள்.

---

## 40 ஓவரில் யாழ் பல்கலைக்கழகம் வெற்றி

(அரியாலை)

கொழும்பு வடக்கு மருத்துவ கல்லூரிக் கோஷ்டிக்கும், யாழ். பல்கலைக்கழகக் கோஷ்டிக்குமிடையே யாழ். பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 40 ஓவர் கிரிக்கட் போட்டியில் யாழ். பல்கலைக்கழகக் கோஷ்டி 4 விக்கட்டாலும், 1 ஓட்டத்தாலும் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு வடக்கு மருத்துவ கல்லூரிக் கோஷ்டி 32 ஓவர்களில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியில் விளையாடிய சிறீ நந்தகுமார், யதுநந்தன், பிரகலாத் ஆகியோர் முறையே 22, 24, 27 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சூரியகுமார் 18 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், டி. எம். இரத்தினராசா 4 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

யாழ். பல்கலைக்கழகக் கோஷ்டி துடுப்பெடுத்தாடி 6 விக்கட்டுகளை இழந்து 35 ஓவர்களில் 133 ஓட்டங்களை எடுத்து வெற்றியீட்டியது. இக்கோஷ்டியில் விளையாடிய சூரியகுமார், டி. எம். இரத்தினராசா, கிரிதரனுத் ஆகியோர் முறையே 35, 29, 22 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய செல்வன் கோபிக்கிருஷ்ணு 15 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும், குமாரசுவாமி 13 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கட்டையும் கைப்பற்றினர்.

மருத்துவ கல்லூரிக் கோஷ்டிக்கு உப்புள் பிரேமவர்த்தனவும், யாழ். பல்கலைக்கழகக் கோஷ்டிக்கு எஸ். சுதாகரனும் கப்டன்களாக இருந்தார்கள்.

---

யாழ். மாவட்டத்தில்

# நாளைமுதல் அமுலுக்குவரும் கல்வி அபிவிருத்தித் திட்டம்!

## இலங்கையில் முதல்தடவை

(உடுப்பிட்டி)

வடமாநிலக் கல்வி அதிபதி திரு. க. சிவநாதனினுல் உருவாக்கப்பட்டுள்ளயாழ்.மாவட்டக் கல்வி அபிவிருத்தித் திட்டம் நாளை முதல் யாழ் மாவட்டப்பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இக் கல்வி அபிவிருத்தித் திட்டம் அமுல்செய்யப்படுவதன்மூலம் யாழ் மாவட்டம் கல்வி அபிவிருத்தியில் மேலும் துரித முன்னேற்றம் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் மாவட்டக் கல்வி அபிவிருத்தித்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுவது இதுவே முதல்தடவையாகும்.

# நாய்க்குச் சிலை வைத்த எதியோப்பிய மன்னன்!

"எதியோப்பிய மக்கள் இறைச்சியைச் சமைபல் செய்யாது பச்சையாகவே உண்ணுகின்றார்கள். மாட்டு இறைச்சி என்றால் இவர்களுக்குத் தனி விருப்பம்" என்று கலாநிதி ஆறுமுகம் கந்தையா, புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்றத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் "நான் கண்ட எதியோப்பியா" பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்;

பருத்தித்துறைக் கல்வி மாவட்டம் ஒழுங்குசெய்த இக்கருத்தரங்கிற்குக் கல்வி வட்டச் செயலாளர் திரு. க. நடனசபாபாதி தலைமைவகித்தார். கலாநிதி ஆறுமுகம் கந்தையா தொடர்ந்து தமது அனுபவம் பற்றிப் பேசுகையில் கூறியதாவது:

**20 மடங்கு விஸ்தீரணம்**

"எதியோப்பியா இலங்கையைப்போல் 20 மடங்கு விஸ்

## சோஷலிஸக் கல்வி

## கட்டாய பாடம்

தீரணமுடையது. 14 மாகாணங்களைக்கொண்டு பிரிக்கப்பட்டுள்ள இந்த நாட்டில் மூன்று கோடி மககள் வாழ்கிறார்கள். எதியோப்பிய மக்களின் தோற்றம், நீக்ரோ மக்களின் தோற்றம் போன்றது என்று கூறிவிடமுடியாது. எனினும் இவர்களது தலைமயிர் நீக்ரோ மக்களது தலைமுடியைப்போல் தடிப்பானதாக இருக்கிறது. சொண்டும் நீக்கிரோக்களைப் போலவே காட்சியளிக்கிறது. எதியோப்பியர்கள் சூடான் நாட்டுடன் தொடர்புடையதால் சூடான் மக்களின் சாயல் எதியோப்பியர்களில் காணக்கூடியதாக இருக்கிறது.

**தலைகுனிந்து வணக்கம் கூறி..**

"எதியோப்பியர்கள் தமது உறவினர்கள், நண்பர்களைச் சந்திக்கும்போது முதலில் தலைவணங்கி, வணக்கம் செலுத்திய பின்னரே குசலம் விசாரித்துக்கொள்வார்கள். இவர்கள், பிற நாட்டவர்களுக்குத் தனி மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்கள். இப்பொழுது அந்த நாட்டில் இராணுவ ஆட்சி நடக்கின்றது. ஒரு மாகாணத்தில் இருந்து இன்னொரு மாகாணத்திற்கு மக்கள் செல்லும்போது, மாகாண எல்லைகளில் இராணுவ சோதனை நடைபெறுகின்றது. இராணுவ சோதனையின்போது மக்கள் தங்களது அடையாளஅட்டைகளை வைத்திருக்கவேண்டும். இராணுவ சோதனையின்போது வெளிநாட்டவர்களுக்குத் தனி மரியாதை அளிக்கப்படுகின்றது.

"எதியோப்பியரின் மொழி அமாறிக் என்று அழைக்கப்படுகின்றது. காரியாலயங்களில் நிர்வாக மொழியாக ஆங்கிலம் பிரயோசிக்கப்படுகின்றது. பலருக்கு இத்தாலிய, அரபு மொழிகளும் நன்கு தெரியும்.

"எதியோப்பியர்கள் இறைச்சியைப் பச்சையாகவே சாப்பிடுகிறார்கள். பெரிய விருந்து வைபவங்களில் மாட்டு இறைச்சியைப் பச்சையாகக் கட்டித் தொங்கவிட்டிருப்பார்கள். விருந்தில் உள்ளவர்கள் தொங்கவிட்டிருக்கும் மாட்டு இறைச்சியைக் கத்தியால் வெட்டித் தூள் போன்ற ஒரு உணவுப் பொருளில் தொட்டுத் தின்பார்கள். எமக்கு அன்றாடம் சோறு அத்தியாவசியமான உணவாக விளங்குவதுபோல் எதியோப்பியர்களுக்கு மூன்று நேர உணவாவாகவும் ,ரெவ்' விளங்குகின்றது.

"'ரெவ்' தானியம் சாமைத் தானியத்தைவிடச் சிறிதானது. இந்தத் தானியத்தை நன்றாக அரைத்து மூன்று தினங்களுக்குப் புளிக்கவைத்துத் தோசை போல் சுட்டு, ,மொத்' என்ற குழம்புடன் சேர்த்து உண்பார்கள். ரெவ் தானியத் தோசையை இஞ்சரு என்று அழைக்கிறார்கள். 'பியர்' குடிவகை என்றால் எதியோப்பியர்கள் விரும்பி தாங்களாகவே வீடுகளில் அருந்துகிறார்கள். பியரைத் தயாரித்துக் கொள்கிறார்கள். சாதாரண மக்கள் குடிசைகளில் வாழ்கிறார்கள். குடிசையை 'சிக்கா' என்று அழைக்கிறார்கள்.

**மன்னரின் ஆட்சியில்**

கடைசி மன்னன் கைலே சலாசி, எதியோப்பிய மக்கள் வறுமையால் வாடியபோது புறக்கணித்தே வந்தானாம். அந்த மன்னன் தனது நாய் இறந்தபோது அதற்குச் சிலை கூடப் பெரிய அளவில் கட்டினானாம். இராணுவப் புரட்சியின்போது அந்தச்சிலையை மக்கள் இடித்து அகற்றிவிட்டார்களாம்! இங்கே 90 வீதமானோர் விவசாயிகளாகவே காணப்படுகிறார்கள். விவசாயிகள் கோப்பி, பருத்தி போன்றவற்றை அதிகளவில் பயிரிடுகின்றார்கள்.

**பல்கலைக்கழக அனுமதி**

"ஆரம்பக் கல்வி முதல் 5ம் வகுப்பு வரை அமாரிக் மொழியிலேயே கல்வி போதிக்கப்படுகிறது. உயர் கல்விக்கு ஆங்கில மொழியே பிரயோகிக்கப்படுகின்றது. எதியோப்பியாவில் பல்கலைக்கழக அனுமதி பெறுவது மிகக் கஷ்டமானது. ஏனெனில் ஒரே ஒரு பல்கலைக்கழகம் இருப்பதே இதற்குக் காரணமாகும். இராணுவப் புரட்சியின் பின்னர் மக்கள் வயதுக் கட்டுப்பாடின்றிக் கல்வி பெறும் வாய்ப்பை இராணுவ அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்தக் கல்வி வசதிக்கு யுனெஸ்கோ நிறுவனமும்உதவிவழங்கிவருக்கின்றது

அங்கே மக்கள் கட்டாயம் சோஷலிசத்தைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டுமென்று இராணுவ அரசாங்கம் விரும்பின்றது. இதனால் சோலிஷச வகுப்புக்களை நடாத்தி மக்களை அவ் வகுப்புக்களுக்கு கட்டாயம் செல்ல வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது. சோஷலிசம் பற்றிய போதனை வகுப்புகளுக்குச் செல்லாதவர்களுக்கு தண்டனையும் வழங்கப்படுகின்றது. எதியோப்பிய பெண்கள் தாங்களே உலக அழகிகளாகத் திகழவதாகப் பெருமைப்படுகிறார்கள், இது எமக்குப் பெரும் ஆச்சரியத்தை அளிக்கிறது."

(தொகுப்பு: உடுப்பிட்டி நிருபர்)

# தட்சரின் மகன்

## மார்க் மீட்கப்பட்டார்!

லண்டன், ஜனவரி 16

மோட்டார் கார் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்டபோது காணமல்போன பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சரின் மகன் திரு. மார்க் தட்சர் தென்அல்ஜீரியப் பாலைவனப் பகுதியில் கூடாரம் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டார்.

தமது கார் பழுதடைந்ததையடுத்து திரு. மார்க் தமது இரு சகாக்களுடனும் பாலைவனப்பகுதியில் கூடாரமடித்து தங்கியிருந்தாராம். இக் குழுவினரை அல்ஜீரிய விமானப்படையைச் சேர்ந்த மீட்புக்குழுவினர் இவர்களை கிராமப்பகுதி ஒன்றிலிருந்து மீட்டனர். திரு. மார்க்கின் காரும் மீட்கப்பட்டது.

அல்ஜீரிய மீட்புப் படையினருக்கு உதவியாக 3 பிரான்ஸ் படைகளும் மீட்பு பணிகளும் ஈடுபட்டிருந்தன. (இ)

# தொழில் நுட்ப ஆசிரியருக்கு சம்பள உயர்வு வேண்டும்

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(உடுப்பிட்டி)

"தொழில் நுட்பக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கி விசேசனம் அளிக்க வேண்டும்' என்று தமிழ் தொழில் நுட்ப ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரைக் கோரியுள்ளது.

இதுசம்பந்தமாக சங்கப் பொதுச் செயலாளர் திரு. ச. சி. செல்வலிங்கம் மகஜர் ஒன்றையும் கல்வி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளார். பிரஸ்தாப மகஜரில் கோரப்பட்டிருப்பதாவது:—

"தமிழ்ப் பிரதேசங்களில் தொழில் நுட்பக் கல்விக்கான கல்வி அதிகாரிகள் இதுவரை நியமிக்கப்படாததால் அவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலைகளில் தொழில் நுட்பக் கல்வி பயிலும் பிள்ளைகளின் விகிதாசாரத்திற்கேற்ப உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

"தொழில் நுட்பப் பாடங்களுக்குரிய மூலப் பொருட்களை வருடஆரம்பத்திலேயே வழங்க வேண்டும்"

சகல பாடசாலை மாணவர்களுக்கும் தேவையான அப்பியாசக்கொப்பி கையிருப்பிலுண்டு.
சட்டுப்பாட்டு விலை!



பாடசாலை
உபகரணங்களின்
மொத்த சில்லறை
வியாபாரிகள்

கண்கவர் வர்ணங்களில்
மின்சார உபகரணங்கள், மின்னியல் பொருட்கள்,
அலங்கார அன்பளிப்புப் பொருட்கள், கடதாசிவகைகள்
அனைத்துக்கும்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன அங்கீகாரம்பெற்ற வியாபாரிகள்
—மின்சார இணைப்பு ஒப்பந்தகாரர்—விற்பனையாளர்)
196, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். போன் : 8291
தந்தி : "வாணர்சன்ஸ்"
(கடைத்தெரு பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக)
தலைமையகம் :
பேர்ள் லேட்ஸ் அம்பலவாணர் சன்ஸ்
78, மலிபன் வீதி, கொழும்பு 11 — போன்: 24821—28244.
லெட்சுமி பவன் 97, ஒல்ஹொட் மாவத்த, கொழும்பு 11.

## நாளை சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் வீதி ஸ்ரீ கொண்டலடி வைரவர் கோவில் வருடாந்த 1008 சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை சிவஸ்ரீ ராஜாஜிகுருக்கள் தலைமையில் நடைபெறுகிறது. (இ)

## விவேகானந்தர் வாய்மொழி

உலகம் தான் விரும்பியதைச் சொல்லட்டும்; நான் செல்லவேண்டிய கடப்பாட்டின் வழியே செல்லுவேன் என்றிருப்பதே வீரவான் ஒழுக வேண்டிய முறை. அங்ஙனமின்றி இரவும் பகலும் இந்த மனிதன் என்ன சொல்லுகிறான், அவன் என்ன எழுதுகிறான் என்ற நினைவோடிருந்தால் பெருங் கருமம் ஒன்றும் நடந்தேறமாட்டா. அறநூல் வல்லார் தன்னைப் புகழினும் புகழுக, இகழினும் இகழுக; இலக்குமிதேவி வரினும் வருக, விரும்பிய இடத்துச் செல்லினும் சென்றுவிடுக; இன்று மரணம் வரினும் வருக, ஒரு நூற்றாண்டு கழித்து வரினும் வருக. அறிவுடையோன் செல்லுதற்குரிய நேர் வழியினின்று சிறிதும் பிசகமாட்டான்.

●

பெரியோருடைய சீவியங்கள் வாழ்க்கை என்னும் உரைகல்லிலே சோதிக்கப்பட்டு நல்லதென்று கண்ட பின்னர்தான் உலகம் அவர்களைப் பெரியோர் என மதிக்கின்றது. ஏழ்மை படைத்த கோழை நெஞ்சர்கள் திரைகடலுக்கஞ்சித் தமது கப்பலைக் கரையிற் கவிழ்த்துவிடும் நீர்மையர். வீரவான் இவற்றைக் கண்ணோக்குவதில்லை. வருவது வருக; நான் கருதிய நோக்கத்தை அடைவேன் என்று ஆண்மையோடு முயலுவதே புருஷாகாரமாகும். இத்தகைய ஆண்மை உன்னிடம் இல்லாவிடின் உனது சோம்பலை நீக்குவதற்குத் தெய்வத்தாலும் ஆகாது.

●

எவ்வளவோ கல்வி கற்ற பின்பும் பிறருடைய வாயிலண்டை போய் எங்களுக்கு வேலை கொடுங்கள் என்று அழுது பிரலாபிக்கிறீர்கள். மற்றவர்களுடைய காலினால் மிதிப்புண்டு மற்றவருக்கு அடிமை பூண்டிருக்கின்றீர்கள். நீங்களும் மனிதர்களா? ஒரு குண்டூசித் தலையளவு பெறுமதிதானும் உங்களுக்கு இல்லை; இந்நாடு வளமுடையது. இதன் வருவாய் பிறநாடுகளிலே நாகரீகம் பரவக் காரணமாயிருந்தது. இந்த நாட்டிலே உங்களுடைய நிலைமை எவ்வாறாக இருக்கிறது? உங்கள் வாழ்க்கை நாயினுடைய வாழ்க்கையிலும் இழிவானது; வேத வேதாந்தங்கள் உண்டு என்று பெருமிதம் பேசுகிறீர்கள். உணவுக்கும் உடைக்கும் ஏற்பாடு செய்து கொள்ளமாட்டாது பிறர் தயவை எதிர்பார்த்து நிற்கும் நீங்கள் பெருமிதம் கொள்வது எதனைக் குறித்து? மனிதவாழ்க்கையைக்கொண்டு நடாத்தவேண்டிய முயற்சிகளை முதலிலே செய்யுங்கள். உங்கள் தேசத்தில் உண்டாகிற பொருட்களைக்கொண்டு பிறர் நிறைந்த பயனைப் பெறுகின்றார்கள்; நீங்கள் பொதி சுமக்கிற கழுதைகள்போல அவர்களுடைய பொருட்களைத் தாங்கிச் செல்கிறீர்கள்.

கருவிகள் உன் கையில் இருக்கின்றன; நீயோ கண்ணைக் கட்டிக்கொண்டு நான் குருடன் எனக்கொன்றும் தெரியவில்லை என்கிறாய், கண்ணைக் கட்டியிருக்கும் துணியைக் கிழித்தெறி. உச்சிக்கால சூரியனுடைய கிரகணங்கள் உலகம் முற்றிலும் ஒளிபரப்புவதைக் காண்பாய்; பிறநாட்டுக்குப் போவதற்குப் பொருள் கிடையாவிடின் கப்பலிலே கூலி வேலை செய்துகொண்டு போய்ச் சேர்.

தொகுத்து அனுப்பியவர்:

பாலசண்முகநாதன்,
கிளிநொச்சி.

[ஆதாரம்: விவேகானந்தர் சம்பாஷணைகள்]

# விசாரணைக்கு வந்தவர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டனர்!

## பொலிஸ் அறிக்கையின் பின் விடுதலை

(மாவிட்டபுரம்)

வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகவந்த சமயம் றிமாண்டில் வைக்கப்பட்ட சந்தேகநபர்கள் இருவர் பொலிசாரின் அறிக்கையையடுத்து மூன்று தினங்களின் பின் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இளவாலைப்பகுதியில் அலனியஸ் அமிர்தநாதன் என்பவரது மீன்வாடியை தீ வைத்துக் கொளுத்தி 4450 ரூபா நஷ்டம் விளைவித்ததாகவும் செபஸ்தியம்பிள்ளை தொம்மைப்பிள்ளையின் மீன்வாடியை தீ வைத்துக் கொளுத்தி 8000 ரூபா நஷ்டம் விளைவித்ததாகவும், தொமிங்கு தேவசகாயம் என்பவரது மீன் வாடியை தீவைத்துக் கொளுத்தி 4450 ரூபா நஷ்டம் விளைவித்ததாகவும் அதேஇடத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் இராஜா, சீமாம்பிள்ளை விஜயன் ஆகிய இருவர் மீதும் காங்கேசன் துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றதில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

ஏற்கனவே பிணையில்விடப்பட்டிருந்த இந்த நபர்கள் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜரானபோது தீ வைப்பு தொடர்பான குற்றச்சாட்டுக்கு பிணை கிடையாது எனக் கூறிய நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் அவர்களை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு இவர்களை பிணையில் விடலாமா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு காங்கேசன்துறைப் பொலிசாரைப் பணித்தார். இதற்கமைய பொலிசார் அறிக்கை சமர்ப்பித்ததால் மூன்று தினங்களின் பின் இவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.


**லிடோ** யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
**பூந்தளிர்**

**வெலிங்டன்**
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
**அன்னப்பறவை**

**றீகல்**
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் — லதா நடித்த
**மீனவ நண்பன்**
(கலர்)

**ராணி** (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
சிவாஜி லட்சுமி
**தங்கைக்காக**

**ஸ்ரீதர்** தினசரி: 10:30, 2:00, 4:30, 7:00, 9:30
யாழ். நகர்
Barry Newman, Shelly Winter
**CITY ON FIRE**
(More suitable for Adults)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி10—30,2—30,6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
**நான் வாழவைப்பேன்**

**சாந்தி** (யாழ்.நகர்) தினசரி 10—30, 2—30, 6—15, 9—45
தொலைபேசி;7642
இன்று 121-வது தினம்
கமல்—ஸ்ரீதேவி—முத்துராமன் மேஜர்— நடித்த
**குரு**
(கலர்) (கடைசி வாரம்)

**ராஜா** (யாழ். நகர்)
**சரஸ்வதி** [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
**தர்ம யுத்தம்** (ஈஸ்ட்மன் கலர்)

**WINDSOR** JAFFNA
From 16th to 17th
Daily:— 10.30, 2.00, 4.30, 7.00, 9.30
Steve McQueen in
**THE GETAWAY**
Action Packed Car Chases (Color Scope)
18th to 19th
**The Gumball Rally**
Comedy = Care chase


# இந்த உலகில் இன்ப வாழ்வு பெற....

பூரணப் பொருள் ஒன்று உள்ளது அதுவே சுத்த பிரம்மம்.

பரம்பொருள் - அது ஒவ்வொருவர் உள்ளத்திலும் சுத்தான்மாவாக விளங்குகின்றது. உலகெங்கும் அது அகண்டாத்மாவாக நிறைந்துள்ளது. அந்தப் பூரணப் பொருளை உள்ளத்திலும் உலகத்திலும்பூரணமாகக் கலந்து அதனுடன் ஒன்றுபட்டு அதன் இன்பத்தில் வளரும் பூரண வாழ்வே யோகத்தின் பொருளாகும், ஆத்ம சுத்தி பெற்று ஆத்ம சத்தியால் இயற்கையை வென்று மனதை அடக்கி ஆண்டு சுகதுக்க வாழ்வில் ஒவ்வொரு நுட்பத்தையும் பூரணமாக்குவதே யோகத்தின் பலனாகும்.

ஒரு மின்சார விளக்கு எரிவதற்கு மின்சக்தி மட்டும் இருந்தால் போதாது. மின்சாரத்தைக் கொண்டு வரும் கம்பி, ஆணி, மின்குமிழ், பல்ப் அதைத் தொடர்ந்தும் உறுப்புக்கள் எல்லாம் பூரணமாக இருந்தால்தான் விளக்கெரியும் அதுபோல் உயிர் மட்டும் இருந்தால் போதாது. அந்தக் கரணம் உடல் இவையும் உறுதியாய் இருந்தால் தான் ஜீவன் வாழ முடியும், அதுபோல் யோகத்திற்குத் தன்னுட்சி அல்லது ஆத்ம சுக்தி மட்டும் போதாது,உடல்காட்சியும் வேண்டும். இறைவனைக் கலந்து இயற்கையை வென்று வாழவேண்டும், பூரணப் பொருளைக் கொண்டு வாழ்வையும் பூரணப்படுத்துவதே சுத்தான்ம யோகமாகும்.

தூலாதாரமாகிய உடலை அசட்டை செய்யக் கூடாது. உடலை உறுதி செய்ய வேண்டும். உடலே, உயிர் குடியிருக்கும் வீடு, ''உடம்பினாலன்றி உணர்வுதானில்லை உடம்பினில் உத்தமனைக் காண்'' என்றார் ஔவையார் ''உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' என்பது திருமூலர் வாக்கு,

நரம்புகளை இயக்குவது பொறிகள். பொறிகளை இயக்குவது மனம். மனத்தை இயக்குவது புத்தி. புத்தியை இயக்குவது ஆன்மாவாகும்.

உடலையும் மனத்தையும் இணைப்பதே உயிர் அல்லது பிராணாயாமம். பிராண சக்தியை வளர்த்தால் உடலுறுதி பெறும். தூய மனத்தால் உடல் தெய்வப் பொலிவுறும். ''மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்த பிற்கால் ஈசனைக் காட்டும் உடம்பு'', இது ஔவை கூறியது, ஆசனம் ஆரம்பிக்கவேண்டும். இரத்தக் கொதிப்பு, இரத்த அழுக்கம் இருப்பவர்கள் ஒரு யோகியின் ஆலோசனைப்படி செய்வது நன்மை. பெண்கள் பெண்களுக்குரிய மாதவிடாய் காலத்தில் ஆசனம் செய்யக்கூடாது. [illegible] அன்பர்களே இவ்வுடம்பு

## சுவாமி ஸ்ரீ சிதானந்த யோகி

### யாழ் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்

செய் முறைக்குக் கட்டுப்பாடு அவசியம். காரம், கடுகு, புகை குடித்தல், மதுபானம், கோப்பி, தேநீர் இவற்றை விலக்கல் வேண்டும். குளிர் பானம், பால், இளநீர், தேசிக்காய்ச் சாறு, வல்லாரை இவை உடலுக்கு நன்மை தரும்: காலையில் வெறு வயிற்றில் ஆசனம் செய்வது சாலச் சிறந்தது. காலையில் நித்திரை விட்டு எழுந்து காலைக்கடன் முடித்துக் கொஞ்சம் அல்லது 10 விளுங்குசலம் குடித்து ஆசனம் தொடங்குவது நன்மை. பிற்பகல் ஆசனம் செய்ய விரும்புவோர் பகல் போசனம் உண்டு ஐந்து மணித்தியாலங்கள் சென்றபின் ஆசனங்கள் செய்தால் நன்மை. உணவு சமிபாட்டுக்கு முதல் ஆசனம் செய்தால் குடலில் நோ உண்டாகும், வெடிப்பு உண்டாகும். ஆசன முறைகளைக் கவனித்துச் செய்வது நன்மை. 18 வயதுக்குக்குறைந்தவர்கள் தலைகீழ் ஆசனம் செய்யக் கூடாது. பெரியவர்கள் எடுத்தவுடன் சிரசாசனம் செய்யக்கூடாது. ஒரு மாதம் மற்ற ஆசனங்களைச் செய்துதான் தலைகீழ் ஆசனம்

காற்றடைத்த பையே. இந்த உடம்பு என்னும் வீட்டுக்குள்ளே உயிர்என்னும் ஆத்மா விடப்பட்டு இருக்கிறது. இந்த உயிருக்கு இவ்வுடம்பு நிரந்தரமானது அல்ல. ஆனால் இதனைக் கருவியாகக்கொண்டு ஆவனபுரிந்து இவ்வுடம்பைக் கொண்டு முக்திப்பேற்றினை அடையவேண்டும். அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை. இந்த உடலுக்கு நோயென்னும் பழுதுவராமல் பாதுகாப்புத் தேவை. பாதுகாத்தால்தான் பிறம்பினால் ஆய பலனை அடையமுடியும். இதற்கு இளமைமுதல் ஆசனம் பிராணாயாமம் என்னும் யோகத்தை அப்பியாசித்து வரவேண்டும்.

நாம் எத்தனை காலம் இம்மனோ வியாதி, உடல் வியாதி இவற்றால் மிகவும் துக்கித்து அதில் திளைத்து வாணாளை வீணாளாக்கின்றோம். 'ஐயோ நோய் வந்துவிட்டதே! சீக்கிரம் வைத்தியரை அல்லது டாக்டரைக் கூப்பிடுங்கள் — மருந்து வாங்கி வாருங்கள், ஊசி போடுங்கள்' என்று நோய் வந்தவுடன் அழுகின்றோம். மற்றவர்களையும் கவலைக்குள்ளாக்குகின்றோம். மனோவியாதிக்கு ஆளாகி வாணாளைக் குறுகிய கால அளவில் குறுக்கி விடுகின்றோம். நமக்குப் பெரும் ஆனந்தத்தையும், ஆத்மீக வாழ்க்கையில் முன்னேறிச் சென்று தெய்வீக வழிபாட்டிற்கு ஞான அறிவையும் பெற யோகாசனம — பிராணாயாமம் மிகவும் உதவுகிறது.

மனநோய், உடல்நோய், கவலைநோய், கஷ்டநோய், துக்கநோய், துன்பநோய், காமநோய் இவ்வகைப்பட்ட ஏழு நோய்களிலும் மிகப்பெரிய நோய் மனநோய். இதை ஆசனமென்னும் மருந்தால் தீர்த்து நீடித்த ஆயுளையும் நல்லுடலையும் ஆத்மீக வாழ்வையும் பெற்று வாழ்வோமாக.




**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9. 30
**எங்க பாட்டன் சொத்து**

6 வது-மகளிர் வாரம்
**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
**நீல மலர்கள்**


# தங்கச்சங்கிலி அபகரிப்பு: ரூ. 1000 பிணையில்அனுமதி

(மாவிட்டபுரம்)

தங்கச்சங்கிலி அபகரிப்பு தொடர்பான சந்தேகநபர் ஒருவர் மல்லாகம் நீதிபதியால் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த மகாலிங்கம் இராசாத்தி என்னும் பெண்மணி வீட்டில் தனித்திருந்தசமயம் அங்கு சென்ற நபர் ஒருவர் ''கணவர் இருக்கிறாரா''? என்று விசாரித்தபின் அப்பெண்மணியின் கழுத்தில் இருந்த 4000 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை அபகரித்துக்கொண்டு ஓடிமறைந்தாராம். அவர் விட்டுச்சென்ற அடையாள கார்ட் ஒன்றின் மூலம் விசாரணைசெய்த காங்கேசன்துறைப் பொலிசார், காங்கேசன்துறையைச் சேர்ந்த [illegible]னப்பு குணரத்தினம் என்பவரைக் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது றிமாண்டில் வைக்கப்பட்டார்.

மீண்டும் இவர் நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது இவரது சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் சத்தியக் கடதாசி ஒன்றை சமர்ப்பித்தார். இதனையடுத்து நீதிபதி இவரை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்:

## கருத்தரங்கு

(உடுப்பிட்டி)

அறவழிப் போராட்ட குழு நடாத்தும் கருத்தரங்கு நாளை வதிரி தமிழ் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அருகில் சகலவசதியுடன் மூன்றரை (3½) பரப்புக் காணி கல்வீட்டுடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: முருகன் விலாஸ் அம்பனை தொல்லிப்பழை 2003

சாவகச்சேரி தபால்கந்தோர் வீதியில் ஸ்கந்த அக்கடமிக்குப் பின் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம் சி.அப்புத்துரை, இளைப்பாறிய ஆசிரியர், உரும்பராய். 1995

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலும், யாழ்நகர் சிவன் கோவிலுக்கு அண்மையிலும், நாவலர் வீதியிலும் காணிகள் விற்பனைக்கு உண்டு. உத்தரவு பெற்ற ''செல்வ ஸ் ஆலோசகர் நிலையத்தினரிடம்'' தொடர்பு கொள்க. 478/2 கே. கே. எஸ். ரோட். சிவலிங்கப் புளியடி, யாழ்நகர். 1967

காங்கேசன்துறை சிமேந்துத் தொழிற்சாலை முன்றலில் அமைந்திருக்கும் குமாரகோவிலுக்கு முன்பக்கமாகவுள்ள புகையிரதப் பாதைக்குஅருகில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு; சி. சிவகுருநாதன் (குருநாதசுவாமி கோவிலடி, காங்கேசன்துறை) உடன் தொடர்பு கொள்ளலாம். 1999

## தேவை

முகாமையாளர், உதவி முகாமையாளர், காசாளர் பதவிகளுக்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 17-1 82 காலை 10 மணிக்கும் 3 மணிக்கு இடையில் நேரில் வரவும். வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனம், பிறேமா றேட்ஸ் மேல்மாடி, கொடிகாமம் வீதி, நெல்லியடி. (நெல்லியடிச் சந்தியிலிருந்து 100 யார்) 1988

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு ஆங்கிலம், கணிதத்தில் தேர்ச்சியும், ஆங்கில தட்டெழுத்தில் நல்ல பயிற்சியும், அனுவமுமுள்ள பெண் தட்டெழுத்தாளர்/லிகிதர் தேவை. தகுதி உள்ளவர்கள் எதிர்பார்க்கும் சம்பளத்துடன்20—01—82க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1969, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 1969

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான மரக்கடைச்சல் தொழிற்சாலைக்கு வேலை தெரிந்த பெண்பிள்ளைகளும் புதிதாக பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பமுடிவு 25—01—82 விளம்பர இல. 1970, மே/பா. ஈழநாடு, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம். 1970

## தேவை

பெண்தையல் தொழிலாளிகள் தேவை. நவீன உடைகள் வெட்டித்தைக்கத் தெரிந்தவர்களாக வேண்டும். K. பென்னுத்துரை பி. எம். ரெயிலேர்ஸ் (பெருமாள் கோவிலடி) 401 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1984

## வாடகைக்கு

யாழ்ப்பாண இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் பள்ளிக்கூட மாணவனுக்கு இடவசதி உண்டு. 78, அரசடி, வீதி, யாழ்ப்பாணம். 1989

யாழ். பெரியகடையோடு இணைந்த வியாபாரஸ்தலத்தருகில், நல்ல அறைகள் வாடகைக்குண்டு. ஓர் மேல் மாடிக்கட்டடமும் (ஔவையார் சிலைக்கருகில்) Firm, ompany, Tutory நடத்தக்கூடியது உண்டு. விபரம்: 142 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2001

## மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

நகர மண்டப மேடைக்கு
திரைச்சீலை
மற்றும் இணைப்புக்கள்
செய்து வழங்குவதற்கான
கேள்விகள்

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் நகரமண்டப மேடையின் முன்பக்கத்திற்கும் பின்பக்கத்திற்குமாக இரண்டு திரைச்சீலைகள் அமைத்து அவற்றிற்குரிய உபகரணங்களுடன் விநியோகித்துப் பொருத்துவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 50/-, கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்துவதன்பேரில் மாநகராட்சி மன்ற வேலைப்பொறியியலாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

கேள்விப்படிவ முடிவு திகதி: 27—01—82 நண்பகல் 12—00 மணி.

கேள்வி ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதி: 28. 01. 82 நண்பகல் 12. 00 மணி.

மேலதிக விபரங்களை மேற்படிபொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சீ. வி. கே. சிவஞானம்
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்.
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15. 01. 82. 1998

மருத்துவ கல்லூரி - பரி யோவான் மோதல்:

# 15 'ஓவர்' போட்டியில் மருத்துவ கல்லூரி வெற்றி

(அரியாலை)

கொழும்பு வடக்கு மருத்துவக் கல்லூரிக் கோஷ்டிக்கும்; யாழ். பரி. யோவான் கல்லூரி முதலாவது பிரிவுக் கோஷ்டிக்குமிடையே பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 15 ஓவர் கிரிக்கெட் போட்டியில் மருத்துவக் கல்லூரிக் கோஷ்டி ஒரு விக்கட்டாலும் மூன்று ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய மருத்துவக் கல்லூரிக் கோஷ்டி 15 ஓவர்களில் 9 விக்கட்டுகளை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியில் விளையாடிய பிரகலாத், குமாரசுவாமி, ஸ்ரீகந்தகுமார் ஆகியோர் முறையே 16, 14, 12 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்துவீசிய உதயகுமார் 34 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும், திருக்குமார் 30 ஓட்டங்களுக்கு 1 விக்கட்டையும், மகிந்தா 16 ஓட்டங்களுக்கு 1 விக்கட்டையும் பெற்றனர். இதனைத் தொடர்ந்து விளையாடிய பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி 15 ஓவர்களில் 4 விக்கட்டுகளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியில் விளையாடிய எஸ். நிர்மலன், என். பிரபாகரன், எஸ். விக்கினராசா ஆகியோர் முறையே 30, 17, 15 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய யதுநந்தன் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கட்களையும், சசிதரன் 2 ஓட்டங்களுக்கு 1 விக்கட்டையும், பிரேமரத்தின 12 ஓட்டங்களுக்கு 1 விக்கட்டையும் பெற்றனர். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்திருந்த கொழும்பு வடக்கு மருத்துவக் கல்லூரிக் கோஷ்டி யாழ்ப்பாணத்தில் மூன்று கோஷ்டிகளுடன் கிரிக்கட் போட்டியில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## பகிரங்க ஏலவிற்பனை வெற்றுச் சாக்கு

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் மொ. விளஞ்சியத்திலிருக்கும் சுமார் 7,000 வெற்றுச்சாக்குகள் இனவாரியாக எதிர் வரும் 27—01—82 புதன்கிழமை காலை 10—00 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலக் கூற்றில் வெற்றிபெறுவோர், ஏலக் கூற்றில் பெற்ற பொருட் பெறுமதியைஉடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்று தமக்குரிய பொருட்களை உடன் ஏற்றிச் செல்லுதல் வேண்டும்.

1982—01—12

தலைவர்
பரு.ப. நோ. கூ. சங்கம்.
200?

மணிப்புரி கலைமகள் சனசமூக நிலையத்தாரால் 14. 1. 82 பொங்கல் தினம் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுபெற்றோர் விபரம் பின்வருமாறு:

1ம் பரிசு இல: 918
2ம் பரிசு இல: 754
3ம் பரிசு இல: 1712
ஆறுதல் பரிசுகள் 5
(தலா 1/2 டசின் வெளிநாட்டு கிளாஸ் டம்ளர்கள்)
இல. 1069, 1689,
1395, 10?4, 36.
(200

வடலியடைப்பு
கலைவாணி விளையாட்டுக்
கழகம் நடத்திய
அதிர்ஷ்டலாப
சீட்டிழுப்பின் முடிவுகள்
14 1 82

1-ம் பரிசு 2031
2-ம் பரிசு: 71
3-ம் பரிசு: 1536

10 ஆறுதல் பரிசுகள்:

2141, 2351, 1068,
2718, 262, 1195,
3561, 771, 1656,
704

இப்படிக்கு
இளைஞர் ...
2002

## பதவி வெற்றிடம்

### நீர்வேலி காமாட்சி அம்பாள் ஐக்கிய கைத்தொழில் சங்கம்

சில்லறை விற்பனை நிலைய முகாமையாளர் (ஆண்)

1. தகமைகள்: க. பொ. த. (சாதா) பரீட்சையில் கணக்கியல்/எண்கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
2. கூட்டுறவு ஊழியர் (சாதா) தராதரப் பத்திரமும், இரும்பு வியாபாரத்தில் அனுபவமுமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. பிணை:- ரொக்கம் 3000/-
   ஆதனம் 5000/-
4. சம்பளம்:- கூ. வே. ஆணைக்குழுவின் நியமப்படி வழங்கப்படும்.

விண்ணப்பங்களை 25—01—82 க்கு முன்பதாக தலைவர், காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழில் சங்கம், நீர்வேலி. என்னும் விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

(1982)

சிங்கர் தையல் நிலையம்

வழங்கும் நற்செய்தி ★

யாழ்ப்பாண மக்களின் வசதி கருதி
தினசரி காலை முதல் மாலை வரை தையல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

* தேசிய அலங்கார வேலைப்பாட்டுடன் கூடிய மெசின் தையல்
* டிப்ளோமா வகுப்புக்கள்
  இரண்டு மாத குறுகிய வகுப்புகள்
* இளமங்கையருக்கான நவீன மோஸ்தர் உடை தயாரித்தல்
  க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கான தையல் மீட்டல் வகுப்புக்கள்
  மாணவிகளுக்கும் தொழில் பார்க்கும் பெண்களுக்கும்
  சனிக்கிழமைகளில் அரை நாள் விடுமுறைகால வகுப்புக்கள்

விபரங்களுக்கு

சிங்கர் ஸ்தாபன

(பஸ் நிலையத்திற்கு முன்பாக)
ஆஸ்பத்திரி வீதி, யழ்ப்பாண

Computer Programming Course in Jaffna with Practical Training on MICRO COMPUTER

வடபகுதி மாணவரின் வசதிக்காக இங்கிலாந்தில் பட்டம் பெற்று பயிற்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளரால் நடாத்தப்படுகிறது.

ஆரம்பம் :
பெப்ரவரி முற்பகுதி

மொத்த காலம் :
6 கிழமை

மொத்த கட்டணம் :
ரூப 750/-(Theory & Practicals)
ரூப 350/- (Theory only)

மேலதிக விபரங்கட் உங்கள் கல்வி தராதரம் பற்றிய விபரங்களு (O/L, A/L) தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

... நந்தகுமார்
''தி டி நிழல்''
டக்கு வட்டுக்கோட்டை
1946

மிகவும் குறைந்த
விசேட
விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
தற்பொழுது
மக்கினென்ஸ் வழங்குகிறது

° சிங்கப்பூர் ° மத்தியகிழக்கு
° லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகள்-

உலகின் எப்பாகத்துக்கும்
கூடிய கழிவுடன் விரும்பிய விமானத்தில்
விமான டிக்கட்டுகள்

° அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்பிரதிநிதிகளான
[illegible] எம்மிடம்

வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில் (TRAVELLERS CHEQUES)
பிரயாணக் காசோலைகள்
நாடுங்கள்

மக்கினென்ஸ் ட்றவல்
சேவிஸ் (சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154

## ரோந்து சேவை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பாதுகாப்புக் கருதி பொலிஸ், இராணுவ ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## கல்வி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரான திரு. டி. எஸ். செனநாயகா போன்றோரின் எதிர்ப்புக்கு மத்தியில் மறைந்த கலாநிதி என். எம். பெரேராவும், கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்காவும் இலவசக்கல்விமசோதாவை ஆதரித்தனர். (கு-கி)

## வாபஸ் பெறுக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமான செயல்பாடுகளில் இறங்குவது.

''1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சகலரையும் நஷ்ட ஈட்டுடன் எதுவித நிபந்தனையுமின்றி சேவையில் அமர்த்தவேண்டும்.

''ஐ. தே. க. அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையைமா நாடு கண்டிக்கிறது.

சிறுபான்மைத் தமிழ்ச்சமூக மக்களுக்குள்ள சமூகக் குறைபாடுகள் மற்றும் அவர்களின் கல்வி, பொருளாதாரம், தொழில்வாய்ப்பு, நிலமின்மை ஆகிய விடயங்களைத் தமிழ்த் தலைவர்களும் அரசாங்கமும மிகவும் அக்கறையுடன் ஆராய்ந்து மேற்படி விடயங்களில் இச்சமூக மக்களுக்குள்ள குறைபாடுகளை உடனடிநிவர்த்திப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சமூகக் குறைபாடுகளை நீக்கும் சட்டத்தை அரசாங்கம் அதிதீவிரமாக அமுல்படுத்தவேண்டும்.'' (இ)

## இதுவும் நடக்கிறது

திரையுலகக் 'கவர்ச்சிக் கன்னி', பிரெஞ்சு நடிகை பிறிஜட் பாடற்றை இப்பொழுது படங்களில் காண்பது மிகவும் அரிது.

பட வாழ்க்கையில் புல பாத்திரங்களைக் கையாண்ட இவர், கடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று நிஜவாழ்க்கையில் பெரும் கைங்கரியத்தைச் செய்துமுடித்தார். அது எப்படி?

ஒரு இடத்தில் நூற்று எண்பது நாய்கள் உணவின்றித் தவித்தன. சில கட்டங்களில் பசிக்கொடுமையால் ஒன்றை ஒன்று சாப்பிடவும் துணிந்தன.

இச்செய்தியை அறிந்த நடிகை பிறிஜட் பாடற், மூவாயிரத்து முந்நூறு றாத்தல் இறைச்சியை இந்த நாய்களுக்குக் கொண்டு சென்றது மட்டுமல்ல; தனது கையினாலே ஊட்டியும் மகிழ்ந்தார்.

நன்றியுள்ள மிருகம் நாய்.

— ஊடுருவி

மரண அறிவித்தல்

இசைமணி வே. நடேசன்

நுணுவில் கிழக்கைச் சேர்ந்தவரும், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிஇளைப்பாறிய ஆசிரியருமான இசைமணி வேலுப்பிள்ளை நடேசன் காலமானார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ராகவன் (சவுதி அரேபியா), மௌலீஸ்வரி, சிறீதரன் (அட்டன் நெஷனல் வங்கி, திருகோணமலை), கேதீஸ்வரன், சதீஸ்வரி, குருபரன், கௌரீஸ்வரி, சிவசங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்தியகலாநிதி சச்சிதானந்தராஜா அவர்களின் அருமை மாமனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் அன்னரது இல்லத்தில் நடைபெறும். (2009)

மரண அறிவித்தல்

எம். ஈ. செல்லர்

எம். ஈ. செல்லர் (அப்பையா) காலமாகிவிட்டார். இவர் முன்னைய ஸ்ரீ முருகன் ரக்ஸி உரிமையாளரும், காலஞ்சென்ற சின்னத்தங்கச்சியின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற செல்லமுத்து, யாழ்ப்பாணம் 'செ. நடராசா பிடவை மாளிகை' உரிமையாளர் நடராசா, எம். ஈ. எஸ். என். பீடித்தொழிற்சாலை உரிமையாளர் நவரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும், அப்பையா, சிவஞானம், கனகம்மா ஆகியோரின் மாமனும், நல்லம்மா, யோகம்மா, தம்பிரத்தினம் (ஈராக்), ஈ. வி. செல்வரத்தினம் (நைஜீரியா), முன்னாள் விவசாய போதனாசிரியர் க. இராமலிங்கம், நேசமலர் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் யாழ், நல்லூர் பருத்தித்துறை வீதி 111ம் இலக்க 'ஆனந்தபவனம்' இல்லத்திலிருந்து இன்று 17—1—82 ஞாயிறு பிற்பகல் 3—00 மணிக்குச் செம்மணி மயானத்துக்கு தகனக்கிரியைக்கு எடுத்துச் செல்லப்படும். 2010

## வெளியூர் மீனவர் இழுவைப் படகுகளை அகற்றுமாறு உத்தரவு!

(மன்னார்)

தலைமன்னார் பழைய பாலப் பகுதியில் உள்ளூர் மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு இடையூறாக இருக்கும் வெளியூர் மீனவர்களின் இழுவைப் படகுகளை பொலிசாரின் உதவியுடன் அகற்றுமாறு மன்னார் கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில், கடற்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

தலைமன்னார் பழைய பாலப் பகுதியில் மீன்பிடித்தொழில் செய்துவந்த வெளியூர் மீனவர் ஒருவரினால் வெளியூரைச் சேர்ந்த 40 இழுவைப் படகுகள் தலைமன்னார் பழையபாலப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டன. இதனால் உள்ளூர் மீனவர்கள் கரைவலை, பாய்ச்சுவலை போன்ற பலவகைப்பட்ட மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் தலைமன்னார் பழைய பாலப் பகுதியில் உள்ளூர் மீனவர்களுக்கும் வெளியூர் மீனவர்களுக்குமிடையில் அடிக்கடி வாக்குவாதங்களும், மோதல்களும் இடம்பெற்று வந்தன.

இப்பிரச்னையைத் தீர்த்து வைக்குமாறுதலைமன்னார்பகுதி உள்ளூர் மீனவர்கள் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு கமிலஸ் பெர்னாண்டோ ஆகியோரிடம் புகார் செய்தனர்.

இது தொடர்பாக மன்னார் கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில், உள்ளூர் மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு இடையூறாக இருக்கும் வெளியூர் மீனவர்களின் இழுவைப் படகுகளை பொலிசாரின் உதவியுடன் அகற்றுவதென தீர்மானிக்கப்பட்டது.

## புதிய உறுப்பினருக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

இந்நாட்டில் வாழும் தமிழினத்தின் இலட்சியத்தை நிறைவேற்றத் தலைவர்களின் வழி சென்று தம்மாலான பங்கைச் செலுத்துவதாக யாழ். மாநகரசபையின் உறுப்பினராக நியமனம் பெற்று வந்த திரு. எம். சுந்தரலிங்கம், தமது கன்னிப் பேச்சில் தெரிவித்தார்.

பொதுக்கூட்டம் யாழ். மாநகராட்சிமன்ற முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற போது திரு. சுந்தரலிங்கத்தை வரவேற்று முதல்வர் உரையாற்றினார்.

இவர் இறந்த அங்கத்தவர் ஆறுமுகத்தின் இடத்துக்கு நியமிக்கப்பட்டவராவர்.

ஜனாப் ஹமீட் புதிய அங்கத்தவரை வரவேற்றுப் பேசுகையில், தமது மாணவர்களான திரு. எம். சுந்தரலிங்கமும், திரு. து. சாந்திகுமாரும் இச்சபையில் அங்கத்தவர்களாக இருப்பதையிட்டுப் பெருமிதமடைவதாகத் தெரிவித்தார்.

ஜனாப் இமாம், உதவி முதல்வர் திரு. எம். அலோசியஸ் உட்படபலர் வரவேற்றுப்பேசினர். (மா)




யாழ். ஸ்டான்லி வீதியில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கமலா கருஜ் அன்ட் இண்டஸ்றீஸ் நிறுவனத்தில் புதிய மரவேலை இயந்திரம் ஆரம்பித்து வைக்கப்படுவதையும் அருகில் இலங்கை உருக்கு கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு. எஸ். யோகரத்தினம், 'அரஸ்கோ' அதிபர் இ. அரசரத்தினம், உரிமையாளர் திரு. ஐ. பொன்னுத்துரை ஆகியோரையும் காணலாம்.

[படப்பிடிப்பு ஏ. வி. எம்.]

## யாருடையது?

மோட்டார் வாகன சாரதி லைசென்ஸ் புத்தகம் ஒன்று இ. போ. ச. பஸ் காப்பாளர் திரு. யேசுதாசன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## சார்ஜன்ட் வேலாயுதபிள்ளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று விடுவிக்கப்பட்டவர்களாவர்.

81 ஜூன் 4ம் திகதி காலை உரும்பராயைச்சேர்ந்த கதிரன் தம்பு என்பவர் மருதனுமடம் சந்தியில் வெற்றுத்தோட்டாக்களைக் கண்டெடுத்து சுப்பிரமணியத்திடம் கொடுத்திருந்தாரென்றும் அவர் உடுவில் கிராமசபைக் காவலாளி கனகலிங்கம் நாதனிடம் கொடுத்துள்ளாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

சில நாட்களின்பின் பிரதி பொலிஸ்மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையிலான குழு, யாழ். வன் செயல்கள் குறித்து விசாரணை செய்ய யாழ்ப்பாணம் வந்திருந்த போது காவலாளி கனகலிங்கம் நாதன் வெற்றுத் தோட்டாக்களை பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் கொடுத்து வாக்குமூலம் அளித்தார்.

ஆகஸ்ட் 14ம் திகதி கனகலிங்கம் நாதன் சுன்னாகம் பொலிஸ்நிலையம் அழைக்கப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டார்.

ஆகஸ்ட் 16ல் இரகசியப் பொலிஸ் குழுவொன்று சுப்பிரமணியத்தை விசாரணைக்காக அழைத்துச் சென்றது, ஆகஸ்ட் 18ம் திகதி கதிரன் தம்பு (வயது 70) மீண்டும்விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்டார்.

அப்பொழுது விசாரணையிலீடுபட்டிருந்த உயர்மட்டப் பொலிஸ்அதிகாரிகளுக்குஉதவியாகஇருந்தசுன்னாகம் பொலிஸ் சார்ஜன்ட் வேலாயுதபிள்ளை, றிசேவ் பொலிஸ் ரகுநாதன் ஆகிய இருவரும் நீதவான்முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு திரும்பவும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் விடுவிக்கப்பட்டுள்ளனர். [மா]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆு ஜனவரி மீ 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.